www.tamilarangam.net

# பாரிசில் புலிகளின் காடைத்தனம்

புலிகளின் பிரெஞ்சுக் கிளையின் அடியாட்கள் கும்பல் ஒன்று ஆயுதங்களுடன் "லாசப்பலில்"உள்ள "லூான் இன்ரனாசனல்",-"சபறினா உணவகம்" ஆகியவற்றிலிருந்து வந்து கடந்த வியாழன் அதிகாலை 3 மணியளவில் குகன் என்னும் இளைஞரைத் தாக்கியுள்ளது. அவ்விளைஞர் ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

15 பேர் கொண்ட மேற்படி கும்பல் தொடர்ந்து தமக்கு எதிரானவர்களைத் தேடித் திரிந்தபோது கடந்த வெள்ளி மாலை 5 மணியளவில் தவம் எனப்படும் தனபாலசிங்கம் தவராசா என்ற இளைஞரை அகிலன் கடைக்கு முன்னால் வைத்துக் கடத்தியுள்ளது. பின்னர் பரன் எனப்படும் கனகரத்தினம் திருவானந்தம் என்ற இளைஞரும் கடந்த சனியன்று கடத்தப்பட்டுள்ளார். இவர்களின் கதி என்னவென்பது இதுவரை எவருக்கும் தெரியவில்லை.

இதே பாணியில்"பாரிஸ் ஈழநாடு" பத்திரிகையின் நிர்வாகியான பாலச்சந்திரன் தாக்கப்பட்டுப் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இக் காடைத்தனத்தை கண்டிப்பதோடு நியாய உணர்வுள்ள தமிழர் சமூகம் இத்தகைய சம்பவங்களுக்கெதிராக மிக வலிமையாகக் குரல் கொடுக்கும்படி வேண்டுகிறோம்.

சபாலிங்கம் கொலைக்கு முன்னரே தொடங்கிய இவ்வன்முறைக்கும், கொலைவெறிக்கும், அமைதியான புகலிட வாழ்க்கையை கேள்விக்குரியதாய் ஆக்கும் இந்நடவடிக்கைகளுக்கும் எதிராக அனைத்துப் புகலிடம் தழுவிய கண்டனக் குரல்களை தொடர்ந்து ஒலிக்கும்படி வேண்டுகிறோம்.

16 . 07 . 1995

"பாரிஸ் வாழ் தமிழர் சமூகம்"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்